

திருநெல்வேலி மாவட்டத்தில் நேற்று பெய்த கனமழையின் காரணமாக பொன்னாக்குடி தாமிரபரணி, கருமேனியாறு, நம்பியாறு நதிநீர் இணைப்பு கால்வாயில் வெள்ளநீர் செல்வதை தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ் உட்பட பலர் உடனிருந்தனர்.



தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மழை வெள்ளத்தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை குறித்து பத்திரிக்கையாளர்கள் சந்திப்பில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன் தலைமையில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சங்கர், மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ். பழனி நாடார், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா முன்னிலையில் நடைபெற்றது.



செங்கோட்டை தஞ்சாவூர் குளம் உடைந்து சாலையில் வெள்ளப்பெருக்கெடுத்து ஓடியதை அமைச்சர் கேகேஎஸ்எஸ்ஆர் ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு அதனை உடனடியாக சரி செய்திட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார் மேலும் அப்பகுதி மக்களுக்கு தேவையான உதவிகளை செய்யுமாறு மாவட்ட கலெக்டர் கமல கிஷோரைகேட்டுக்கொண்டார். உடன் தென்காசி தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ஜெயபாலன் செங்கோட்டை நகரக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் ஆ. வெங்கடேசன் மற்றும் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் உள்ளனர்

தென்காசி மாவட்டத்தில்

# மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள்: அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் நேரில் ஆய்வு

**தென்காசி டிச.14:**

தென்காசி மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்



தென்காசி மாவட்டத்தில் வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்தத் தாழ்வு மண்டலத்தால் தமிழகம் முழுவதும் கனமழை பெய்து வரும் நிலையில் தென்காசி, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டத்திற்கு ரெட்அலர்ட் விதிக்கப்பட்ட நிலையில் *12.12.2024* காலை முதல் தென்காசி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்து வந்த நிலையில், நேற்று *(13.12.2024)* தென்காசி மாவட்டத்தில் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வுமேற்கொண்டார்.

ஆலங்குளம் தொட்டியான் குளம் பகுதியினை நேரடியாக பார்வையிட்டும், தென்காசி சிற்றாறு பாலத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டும், குற்றாலம் மெயின் அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட பகுதியினையும், செங்கோட்டையிலுள்ள தஞ்சாவூர் குளத்தினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணையின்படி, தென்காசி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் கன மழை பெய்து வருவதால், மழை வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மழையினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தீயணைப்பு மீட்புப் படையினர் மூலம் பொதுமக்கள் மீட்கப்பட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு, அரசு சார்பில் அவர்களுக்குத் தேவையான நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. மழை தொடர்ந்து பெய்து வருவதால் பொது மக்கள் நீர்நிலைகளுக்குச் செல்லாமல் பாதுகாப்பாக இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது என வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறைஅமைச்சர் கே. கே.எஸ்.எஸ்.ஆர் .ராமச்சந்திரன் தெரிவித்தார்.

பின்னர், குற்றாலம் கலைவாணர் கலையரங்கில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ள 77 நரிக்குறவர் குடும்பங்களைச் சேர்ந்த 277 நரிக்குறவர் இனமக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி அவர்களுக்குஅரிசி, பருப்பு,எண்ணெய், தட்டு, போர்வை, பாய் உள்ளிட்டநிவாரணபொருட்களை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறைஅமைச்சர் வழங்கினார் .

இந்தஆய்வின் போது, மாவட்ட கண்காணிப்பு அலுவர் சங்கர், மாவட்டஆட்சித் தலைவர் .ஏ.கேகமல்கிஷோர், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனிநாடார், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திவ்யா மணிகண்டன், தென்காசி நகர்மன்ற தலைவர் ஆர்.சாதிர், தென்காசி வருவாய் கோட்டாட்சியர் லாவண்யா, தென்காசி வட்டாட்சியர் ராம்குமார், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம் குற்றாலம் பகுதிகளில் வெள்ள தடுப்பு நடவடிக்கைகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சங்கர், மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

சங்கரன்கோவிலில்

# மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள்: ராஜா எம்எல்ஏ ஆய்வு



சங்கரன்கோவில். டிச.*14.*

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் பகுதிகளில் கடந்த புதன் கிழமை இரவு முதல் தொடர்ந்து மழை பெய்து வருகின்றது. இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை முதல் விடிய விடிய கனமழை பெய்தது. இதனால் நகரில் பல்வேறு பகுதிகளில் மழைநீர் தேங்கி நின்றது . இந்த நிலையில் இது குறித்த தகவல் அறிந்த தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ நேரடியாக சென்று சங்கரன்கோவில் நகராட்சிக்கு உட்பட்ட தென்றல் நகர், கக்கன் நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஏற்பட்டுள்ள மழை பாதிப்புகளை ஆய்வு செய்தார். மேலும் அந்த பகுதியில் தேங்கியிருக்கும் மழை நீரை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வலியுறுத்தினார் . அதனை தொடர்ந்து பொதுமக்களிடம் பேசிய ராஜா எம்எல்ஏ வெள்ளம் பாதிப்பு தொடர்பாக எந்த ஒரு உதவி தேவைப்பட்டாலும் தன்னை அணுகலாம் என கேட்டுக் கொண்டார். மேலும் மழை நேரங்களில் பாதுகாப்பாக இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார் இந்த நிகழ்வின்போது சங்கரன்கோவில் நகர செயலாளர் பிரகாஷ், வார்டு செயலாளர் தடிகாரன் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

கோவில்பட்டியில்

# வெள்ள சேதங்கள்: எம்எல்ஏ கடம்பூர் ராஜூ பார்வையிட்டார்



**கோவில்பட்டி டிச *14***

கோவில்பட்டி பகுதியில் மந்தி தோப்பு ரோடு, இளையரசநேந்தல் ரோடு, சுரங்கப்பாதை, புது ரோடு, சுரங்கப்பாதை உள்ளிட்ட பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தால் தண்ணீர் கரை புரண்டு ஓடியதை கடம்பூர்ராஜு எம் எல் ஏ பார்வையற்றார்.

கோவில்பட்டி நகர செயலாளர் விஜயபாண்டியன், கோவில்பட்டி அதிமுக மத்திய ஒன்றிய செயலாளர் யூனியன் வைஸ் சேர்மன் பழனிச்சாமி, மாவட்ட இளைஞர் இளம் பெண்கள் பாசறை செயலாளர் எம். ஆர்.வி. கவியரசன், கலை இலக்கிய பிரிவு செயலாளர் போடு சாமி, அம்மா பேரவை நகர செயலாளர் ஆபிரகாம் அய்யாதுரை, முன்னாள் நகர பொருளாளர் வேல்முருகன், இலுப்பை யூரணி வார்டு கவுன்சிலர் மருத்துவர் வெற்றி சிகாமணி, மாநில வழக்கறிஞர் பிரிவு இணைச் செயலாளர் ஈஸ்வரமூர்த்தி, மாவட்ட வழக்கறிஞர் அணி பிரிவு செயலாளர் ஜி.எம். சங்கர கணேஷ், மணியாச்சி மாரிமுத்து பாண்டியன், மாவட்ட மாணவரணி துணைத் தலைவர் பொறியாளர் தாஸ் அய்யனுராஜ், நகர் மன்ற உறுப்பினர் செண்பகமூர்த்தி, மாவட்ட மாணவரணி துணைத் தலைவர் அத்தை கொண்டான் செல்வகுமார், அம்மா பேரவை வானர மூட்டி பழனி குமார், தகவல் தொழில்நுட்ப அணி மாரிமுத்து பாண்டியன், மாவட்ட மகளிர் அணி இணைச் செயலாளர் ஜெயந்தி, மூப்பன்பட்டி கிளைச் செயலாளர் முருகன், உட்பட பல உடன் இருந்தனர்.

# ஆழ்வார்திருநகரியில் கருட சேவை

**ஆழ்வார்.டிச.*14.***



நவதிருப்பதிகளில் ஒன்பதாவது திருப்பதி ஆழ்வார்திருநகரியில் கருடசேவை நடந்தது. கைசிக ஏகாதசி முன்னிட்டு காலையில் 6 மணிக்கு விஸ்வரூபம் 7 மணிக்கு திருமஞ்சனம். 8 மணிக்கு திருவாராதனம். பின்னர் சுவாமி பொலிந்து நின்ற பிரான் ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவி ஆதி நாயகி குருகூர் நாயகி சமேதராக சயனக் குறட்டில் எழுந்தருளினார். இடது மண்டபத்தில் நம்மாழ்வார் தொடர்ந்து கூரத்தாழ்வார். ராமானுஜர். தேசிகர். மணவாளமாமுனி மற்றும் ஆழ்வாராதிகள். எழுந்தருளினர். மதுரகவி பரம்பரையின் அண்ணாவியார் பட்சி ராஜன் சுவாமியை அரிவாணம் கொண்டு அழைத்து வந்தனர். சுவாமி முன்னிலையில் அண்ணாவியார் பட்சி ராஜன் கைசிக ஏகாதசி புராணம் ஆன நம்பாடுவான் கதையை படித்தார்.

பின்னர் தீர்த்தம் சடாரி பிரசாதம் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. நம்மாழ்வார் தனது சன்னதி வந்தவுடன் அண்ணாவியார் சுவாமியை அவரது திரு மாளிகைக்கு பிரம்ம ரதத்தில் கொண்டு விட்டு வர அருளிப்பாடு சாதிப்பார். உடன் கோவில் ஸ்ரீ பாதம் தாங்கிகள் அவரை பிரம்ம ரதத்தில் அவரது திரு மாளிகையில் கொண்டு விட்டனர். மாலை 6 மணிக்கு சாயரட்சை. பின்னர் பொலிந்து நின்றபிரான். மற்றும் நம்மாழ்வார் வாகன குறட்டிற்கு எழுந்தருளி இரவு 7.30 மணிக்கு பொலிந்துநின்ற பிரான் கருட வாகனத்திலும் நம்மாழ்வார் அன்ன வாகனத்திலும் மழையின் காரணமாக பந்தல் மண்டபம் சுற்றி புறப்பாடு நடந்தது. இந்நிகழ்ச்சியில் அர்ச்சகர்கள் கண்ணன். விவேக் எம்பெருமானார் ஜீயர். அறங்காவலர் குழுத் தலைவர் ராமானுஜன் (எ) கணேசன். உறுப்பினர்கள் கிரிதரன். ராம லட்சுமி. காளிமுத்து . செந்தில். நிர்வாக அதிகாரி சதீஷ். ஆய்வாளர் நம்பி. முன்னாள் அறங்காவலர் தலைவர் ராஜப்பா வெங்கடாச்சாரி உட்பட பக்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.



செங்கோட்டை பாரஸ்ட் செக் போஸ்ட் அருகில் உள்ள மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வெளியில் வர முடியாத நிலையில் உள்ள முதியவர் ஆண்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்ன 65 நபர்களுக்கு உணவு வழங்கிய செங்கோட்டைகாவல்ஆய்வாளரைபொதுமக்கள்பாராட்டினர்



செங்கோட்டை வல்லம் ரோட்டில் குண்டாறு பகுதியில் வெள்ளம் சூழ்ந்த நிலையில் வட இந்தியர்கள்10க்கும் மேற்பட்டோர் சிக்கி தவித்தனர். அவர்களை உடனடியாக தீயணைப்புத் துறை வீரர்கள் வந்து பத்திரமாக மீட்டனர். மீட்பு படையினரை செங்கோட்டை நகர தி.மு. செயலாளர் வழக்கறிஞர் ஆ.வெங்கடேசன் மற்றும் நகர திமுக நிர்வாகிகள் பாராட்டினர்.



செங்கோட்டையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை பொதிகை அறக்கட்டளை நிறுவனத் தலைவர் கிருஷ்ணன் பார்வையிட்டார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில்

# பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகளின் நீர்மட்டம்: கலெக்டர் ஆர்.அழகுமீனா நேரில் ஆய்வு



கன்னியாகுமரி,டிச.14-

கன்னியாகுமரி மாவட்ட நீர்வளத்துறை சார்பில் திருவட்டார் வட்டத்திற்குட்பட்ட பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணையின் நீர்மட்டங்களை கலெக்டர் ஆர்.அழகுமீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்:-

தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் புயல் சின்னம் காரணமாக மழை பெய்து அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வெள்ளப்பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்திலும் பல்வேறு பகுதிகளில் மழை பெய்து வருகிறது. எனவே மாவட்டத்தில் உள்ள மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளுக்குட்பட்ட கடலோரப்பகுதிகள், மலை அடிவார பகுதிகள், தாழ்வான பகுதிகள், ஆற்றுப்படுகைகள், நீரேற்ற பகுதிகள் உள்ளிட்ட இடங்களில் பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் மழைநீர் உட்புகாதவாறு தடுப்புகள், மணல் மூடைகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் சாலையோரப் பகுதிகள், மலைப்பகுதிகள், பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் மரங்கள் சாய்ந்து விழுமாலும், போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள மரக்கிளைகளை அகற்றிட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சாலை ஓரங்களில் உள்ள கழிவுநீர் ஓடைகளில் மழைநீர் தேங்காதவாறு தண்ணீர் செல்லும் வகையில் சுத்தம் செய்து சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகளின் நீர்மட்டத்தினை ஆய்வு செய்ததோடு, அவ்வப்போது அணைகளின் நீர் இருப்பு, நீர் வரத்து அகியவற்றினை கண்காணிக்க துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தபட்டுள்ளது. மேலும் கனமழை பெய்து வெள்ளப்பெருக்கு ஏற்படின் அணையிலிருந்து வெள்ளநீர் மறுகால் திறந்துவிட்டால் அதனால் ஏதேனும் பாதிப்புகள் ஏற்படுமா என்றும், மதகுகள் நல்ல நிலையில் உள்ளதா என்பது குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்ததோடு, நீர்வளத்துறை அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது. உபரிநீர் வெளியேற்ற வேண்டியது இருந்தால் அதற்கு முன்னதாகவே பொதுமக்களுக்கு தகுந்த அறிவிப்புகள் வழங்கியும், நீர்நிலைகள் தாழ்வான பகுதிகளின் அருகாமையில் உள்ள பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்து அவர்களுக்கு தேவையான உணவுகள், குடிநீர், கழிப்பறைகள் உள்ளிட்ட அத்தியாவாசிய தேவைகளை நிறைவேற்றுவதோடு, தேவையான அளவு இருப்பு வைத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு இவ்வாறு கலெக்டர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வுகளில் அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்



தென்காசிதெற்குமாவட்டத்தில்கனமழையால்பாதிக்கப்பட்ட இடங்களைபார்வையிடவருகைதந்தஅமைச்சர்கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரனை தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வே.ஜெயபாலன் தலைமையில் சுரண்டை நகர திமுக செயலாளர் கணேசன் உடன் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்



கடையநல்லூர் வட்டத்தில் கருப்பாநதி அய்யனார் கோவில் பகுதியில் மழை வெள்ளத்தில் சிக்கிக் கொண்டவர்கள், வயதானபாட்டிஉட்படபலரைதீயணைப்புமற்றும்மீட்புபணி வீரர்கள் பத்திரமாக மீட்டனர்.

# எஸ்டிபிஐ கட்சி சார்பாக மழை வெள்ள நிவாரண உதவி



தென்காசி டிச.14

தென்காசி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் கன மழை காரணமாக தென்காசி நகர பகுதிகளான மங்கம்மாள் சாலை, கீழ வாலிபன்பொத்தை ஆகிய பகுதியிலுள்ள வீடில்லாமல் சாலையோரம் வசிக்கும் மக்கள் மலையான் தெரு சமுதாய நலக்கூடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். எஸ்டிபிஐ கட்சியின் சார்பில் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி அவர்களுக்கு தேவையான பாய், தலையணை, போர்வைகள் மற்றும் உணவுகள் வழங்கப்பட்டது. மாவட்ட அமைப்பு பொதுச்செயலாளர் திவான் ஒலி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட பொதுச்செயலாளர் செய்யது மஹ்மூத், நகர தலைவர் செய்யது அலி பாதுஷா, நகர இணைச்செயலாளர் ஜாஹிர் ஹுசைன், நகர செயற்குழு உறுப்பினர் ஜமால் மைதீன், வார்டு நிர்வாகிகள் சதக்அப்துல்லா , பாதுஷா, முஸ்தபா , வார்டு கவுன்சிலர் சுமதி இசக்கி ஆகியோர் கலந்து கொண்டு உதவிகளை வழங்கினர்.

# தாமிரபரணி ஆற்றில் வெள்ளம்: 4 ஆயிரம் வீடுகளை தண்ணீர் சூழ்ந்தது

நெல்லை.டிச.14

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் அமைந்துள்ள அணைகளின் நீர் பிடிப்பு பகுதிகளிலும் கன மழை 2 நாட்களாக பெய்து வருவதால் களக்காடு தலையணையில் காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. இதனால் அங்கு சுற்றுலாப் பயணிகள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் அம்பை சுற்றுவட்டாரத்தில் சுமார் 22 சென்டிமீட்டர் மழை கொட்டி தீர்த்துள்ளது. இதே போல் பாப்பாக்குடி, இடைகால், சீதபற்ப நல்லூர், வீரவநல்லூர் உள்ளிட்ட பகுதிகளிலும் விடிய விடிய பெய்து வரும் கனமழை காரணமாக ஏராளமான சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

வீரவநல்லூர் பகுதியில் 25 சென்டிமீட்டர் மழை பதிவாகியுள்ளது. மாவட்டம் முழுவதும் தொடர் மழை காரணமாக வறண்டு கிடந்த குளங்களுக்கும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. நெல்லை மாவட்டம் சீதபற்பநல்லூர் காவல் சரகம் புதூர் அருகே நான்கு வழி சாலையில் உள்ள முதியோர், பெண்கள் காப்பகம் ரோட்டின் தாழ்வான பகுதியில் உள்ளதால் மழை தண்ணீர் சூழ்ந்தது. முதியோர்கள் வெளியேற முடியாமல் தவித்தனர்.

நெல்லை மாநகர் பகுதியில் நெல்லையில் மட்டும் 20 சென்டிமீட்டர் மழை கொட்டி தீர்த்துள்ளது. இதன் காரணமாக முக்கிய சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.மாநகரில் தாழ்வான பகுதிகளில் அமைந்துள்ள வீடுகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. குறிப்பாக டவுன் சுற்று வட்டார பகுதிகளில் சுமார் 500-க்கும் மேற்பட்ட வீடுகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. டவுன் முகமது அலி தெருவில் நள்ளிரவில் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது. டவுன் காட்சி மண்டபம் பகுதியில் தடிவீரன் கோவில் தெரு, செண்பகம் பிள்ளை தெரு உள்ளிட்ட ஏராளமான தெருக்களில் மழை நீர் புகுந்ததால் குடியிருப்பு வாசிகள் மிகவும் அவதி அடைந்தனர்.

காட்சி மண்டபம் அருகே உள்ள ஊசி மாடன் கோவில் களுக்குள் தண்ணீர் புகுந்தது. நெல்லையப்பர் கோவில் ரத வீதிகளிலும் மழை நீர் குளம் போல் தேங்கி நிற்கிறது. நெல்லையப்பர் கோவிலில் வடக்கு மண்டபம் பகுதியில் தண்ணீர் புகுந்தது.டவுன் குறுக்குத்துறை முருகன் கோவிலை மூழ்கடித்தபடி தாமிரபரணி ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. பாளையங்கோட்டை பகுதியிலும் மனக்காவலம் பிள்ளை நகரில் ஏராளமான குடியிருப்பு பகுதிகளில் வெள்ள நீர் புகுந்தது. அதிகாலையில் புகுந்த வெள்ள நீர் காரணமாக தங்கள் குழந்தைகளுடன் கடும் சிரமத்துக்கு இடையே பொதுமக்கள் வெளியேறினர். இதேபோல் கே.டி.சி நகரில் பெரும்பாலான இடங்களில் குடியிருப்புகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. மாநகரின் விரிவாக்க பகுதிகளிலும் மழை நீர் தேங்கி கிடப்பதால் வீடுகளிலிருந்து வெளியே வர முடியாமல் மக்கள் கடும் அவதி அடைந்து வருகின்றனர். நெல்லை மாநகர பகுதியில் மட்டும் சுமார் 2000 வீடுகள் வெள்ளத்தில் தத்தளிக்கிறது.

நெல்லை சந்திப்பு பஸ் நிலையத்தில் இரவு வரை பெய்த மழையிலேயே பஸ் நிலையத்துக்குள் வெள்ளம் புகுந்தது. இன்று அதிகாலை 3 மணி அளவில் பஸ் நிலையத்தை ஒட்டி அமைந்துள்ள சிந்து பூந்துறை தெருவில் வெள்ள நீர் புகுந்ததால் குடியிருப்பு வாசிகள் மிகவும் அவதி அடைந்தனர்.

அங்கும் சுமார் 50-க்கும் மேற்பட்ட வீடுகளில் வெள்ள நீர் புகுந்தது. நெல்லை சந்திப்பு பகுதியில் உள்ள வங்கி கட்டிடத்திற்குள்ளும் தண்ணீர் புகுந்தது. பேட்டை பழைய பேட்டை இணைப்பு சாலையில் வெள்ள நீர் கரை புரண்டு வருவதால் அங்குள்ள ஆதாம் நகர் பகுதிக்குள் வெள்ளநீர் புகுந்தது.

இதேபோல் மாநகரின் பெரும்பாலான இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்தது. அவற்றை தீயணைப்புத் துறையினர் உடனடியாக சென்று அப்புறப்படுத்தினர். ஒரு சில இடங்களில் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டாலும் மின் ஊழியர்கள் விரைந்து செயல்பட்டு அவற்றை சரி செய்தனர். டவுன் மேலநத்தம் பகுதியில் உள்ள தாமிரபரணி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள தரைப்பாலம் தெரியாத அளவுக்கு வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. இதன் காரணமாக மேலப்பாளையம் செல்லும் அந்த சாலை ஆனது துண்டிக்கப்பட்டது.

# புயல் மழை வெள்ள பாதிப்பு மற்றும் நிவாரணம் குறித்து 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம்

## கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் அறிவிப்பு



தென்காசி டிச 14:

தற்போது வடகிழக்கு பருவமழையை தொடர்ந்து அரபிக் கடல் நோக்கி செல்லும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் மிக கன கனமழையாக பெய்து வருகிறது நேற்று முன்தினம் நள்ளிரவில் தென்காசி மாவட்டம் முழுவதும் இடி மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்தது தொடர்ந்து நேற்று வெள்ளிக்கிழமை காலை கடையநல்லூர் நகர் பகுதியில் உள்ள பாப்பான் கால்வாய் ஓடை மற்றும் சீவலங்கால்வாய் ஆகிய பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது கருப்பாநதி அணைக்கு வரும் உபரிநீர் முறையான அறிவிப்புடன் திறந்து விடப்பட்டுள்ளது. ஆகவே பாப்பான்கால்வாய் ஓடைப்பகுதியில் வசித்து வரும் பொதுமக்கள் மிகுந்த பாதுகாப்புடன் விழிப்புடன் இருக்க வேண்டும் வெள்ளப்பெருக்கினை தொடர்ந்து கடையநல்லூர் நகராட்சி நிர்வாகம் பொது மக்களுக்கு 24 மணி நேரமும் சேவை செய்ய காத்திருப்பதை உறுதி செய்திடும் வகையில் நகராட்சி உறுப்பினர்கள் மற்றும் நகராட்சி ஆணையர் ரவிச்சந்திரன், பொறியாளர் முகைதீன அப்துல் காதர், சுகாதார அலுவலர் பிச்சையா பாஸ்கர், மேலாளர் சண்முகவேல், ஆய்வாளர்கள் சிவா மற்றும்மாதவராஜ் குமார் ,வருவாய் ஆய்வாளர் ராஜசேகர் ,துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் ஆகியோர் நகர் முழுவதும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர் தென்காசி கொல்லம் மதுரை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஆபத்தான பிளக்ஸ் பேனர்களை அகற்றியதோடு சீவலங்கால்வாய் மற்றும் பாப்பான் கால்வாய் ஓடைகளில் உள்ள செடி கொடி மற்றும் மதகுகளின் அடைப்புகளை அகற்றியதால் ஆறுகளில் வெள்ளம் சீராக செல்கிறது கடந்த காலங்களில் மதீனா நகர் பகுதியில் மழை வெள்ளத்தின் போது ஊருக்குள் வெள்ளம் வந்தடைந்தது தற்போது அது போன்று எதுவும் நடைபெறாத வண்ணம் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் நகர் மன்ற தலைவர், நகர மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகராட்சி அதிகாரிகள் தமிழக முதல்வர் உத்தரவுப்படி மக்களோடு மக்களாக நின்றுகளப் பணி ஆற்றி வருகிறோம் கன மழையின் காரணத்தால் ஆறு குளம் மற்றும் ஏரிகளில் நின்று செல்பி எடுப்பதையோ மின்கம்பங்களில் ஈரக்கையுடன் சென்று மின் சாதனங்கள் பொருத்துவதையோ தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார் மேலும் நகர் பகுதியில் மழையினால் வீடுகளில் சுவர்கள் மற்றும் பாதிப்பு ஏற்பட்டால் கீழ்கண்ட எனது செல் எண் மற்றும் ஆணையர் பொறியாளர் துப்புரவு அலுவலர் மற்றும் ஆய்வாளர்களின் செல்போன் எண்களில் பேசி தீர்வு காணுங்கள் அதிக

ஆற்றின் வெள்ளத்தில் கரையோரம் குளிப்பது வேடிக்கை பார்ப்பதை பொதுமக்கள் தயவு செய்து தவிர்க்கவும் கடையநல்லூர் நகராட்சிக்குட்பட்ட பொது மக்களுக்கு நகர்மன்ற தலைவரின் அன்பான வேண்டுகோள் அதீத கனமழையின் காரணமாக பொதுமக்கள் யாரும் தேவையில்லாமல் வெளியே வர வேண்டாம். தங்களது குழந்தைகளையும் பெரியவர்களையும் கவனமாக பார்த்துக் கொள்ளவும். மின் கம்பங்கள் அருகில் செல்ல வேண்டாம். ஆறு கிணறு , குளங்களில் வரும் வெள்ளம் , " பார்த்து செல்பி எடுக்கவோ வீடியோ எடுக்கவோ வேண்டாம். மழை வெள்ளம் பாதிப்பு குறிப்பாக பாப்பான் கால்வாய் ,சீவலங் கால்வாய் ,சாலாப்பேரி குளம் ,அட்டக்குளம் மற்றும் நகரின் உள்ள நீர் நிலைகள் அருகில் செல்ல வேண்டாம் உதவி கள் நிவாரணப் பணிகள் யாருக்கு தேவைப்பட்டாலும் தங்கள் பகுதிகளில் மழையால் ஏதேனும் பாதிப்புகள் இருப்பின் உடனடியாக நகராட்சி நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தவும் தெரியப் படுத்தவும் நகர்மன்றத்தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான் - 7845445678, ஆணையாளர், ரவிச்சந்திரன் -7358398949, பொறியாளர், முகைதீன் அப்துல்காதர் - 9443182486 , பிச்சையா பாஸ்கர், சுகாதாரஅலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் சிவா, மாதவராஜ் குமார் - 98651 77009/ 9790173584/8838347773 ஆகிய கைபேசி எண்களில் தொடர்பு கொள்ள நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான் கேட்டுக் கொண்டுள்ளார்

# திருச்செந்தூர் புளியடி சந்தண மாரியம்மன் கோயில் வருஷாபிஷேக விழா



திருச்செந்தூர், டிச. 14

திருச்செந்தூர் புளியடி ஸ்ரீ சந்தணமாரியம்மன் கோயில் வருஷாபிஷேக விழாவை முன்னிட்டு அம்மனுக்கு புஷ்பாஞ்சலி நடைபெற்றது.திருச்செந்தூர் புளியடித்தெருவில் உள்ள ஸ்ரீ சந்தணமாரியம்மன் கோயில் வருஷாபிஷேக விழா நடைபெற்றது. விழாவை முன்னிட்டு அதிகாலையில் கோயில் நடைதிறக்கப்பட்டு கணபதி ஹோமம், கும்ப பூஜைகள் நடைபெற்று, விமான அபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து ஸ்ரீ சந்தணவிநாயகர் மற்றும் ஸ்ரீ சந்தணமாரி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்கார தீபாராதனை நடந்தது. மாலையில் அம்மனுக்கு புஷ்பாஞ்சலியாகி தீபாராதனை நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர்.விழாவிற்கான ஏற்பாடுகளை விழாக்கமிட்டி தலைவர் வெங்கடாசலம், செயலாளர் பாலசுப்பிரமணியன், பொருளாளர் கார்த்திக், முன்னாள் தலைவர் குமார் உள்ளிட்ட கமிட்டியினர் செய்திருந்தனர்.

# சங்கரநாராயண சுவாமி திருக்கோயிலின் உள்ளே புகுந்த மழை நீரை வெளியேற்றும் பணி

## சேர்மன் உமா மகேஸ்வரி ஆய்வு



சங்கரன்கோவில். டிச.14.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் நேற்று முன்தினம் இரவு முதல் பெய்த கனமழையால் சங்கரன்கோவில் சங்கரநாராயண சுவாமி திருக்கோயிலில் மழைநீர் சூழ்ந்ததால் பக்தர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாக்கினர்.

சங்கரன்கோவில் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த புதன் கிழமை இரவு முதல் லேசான மழை பெய்து வந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை முதல் கனமழை நேற்று வரை பெய்து வந்தது. இந்த கனமழையால் சங்கரன்கோவில் சங்கரநாராயண சுவாமி கோயிலின் உள்பகுதியில் மழை நீர் வெள்ளம் போல் சூழ்ந்தது நேற்று திருக்கார்த்திகையை முன்னிட்டு கோயிலுக்கு தரிசனம் செய்த செய்ய வந்த பக்தர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகினர்.

மேலும் கோயிலின் உள்ளே அமைந்துள்ள நாகசுனை தெப்பம் நிரம்பியதாலும் கோயிலில் உள்ளே புகுந்த மழை நீர் வெளியே செல்ல வழி இல்லாததால் பக்தர்களின் முழங்கால் அளவிற்கு தண்ணீர் தேங்கி நின்றது.

இதனை சங்கரன்கோவில் நகராட்சி சேர்மன் உமா மகேஸ்வரி, நகராட்சி கமிஷனர் சபாநாயகம் ,கோயில் பொறியாளர் முத்துராஜ் , நகராட்சி சுகாதார அலுவலர் வெங்கட்ராமன் ஆகியோர் பார்வையிட்டு தேங்கி இருந்த தண்ணீரை வெளியேற்ற முயற்சி மேற்கொண்டனர். இதில் நகராட்சி மற்றும் கோயில் பணியாளர்கள் தேங்கி இருந்த மழை நீரை மோட்டார் மூலம் மாட வீதியில் உள்ள வாறுகாலுக்கு அனுப்பி மழை நீரை அப்புறப்படுத்தினர்.

# கோவில்பட்டி சீவலப்பேரி குடிநீர் வினியோகம் மூன்று நாட்கள் தடைப்படும்: நகராட்சி ஆணையர் அறிக்கை

**கோவில்பட்டி டிச 14**

கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் கமலா ஒரு பத்திரிக்கை செய்தி குறிப்பு வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியுள்ளதாவது கோவில்பட்டி சீவலப்பேரி குடிநீர் இணைப்பு தாமிரபரணி ஆறு சீவலப்பேரி பகுதியில் போர் மூலம் பம்பிங் செய்யப்பட்டு பகிர்மான குழாய் மூலம் கோவில்பட்டி கொண்டுவரப்பட்டு நகராட்சி பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. தற்போது நெல்லை தூத்துக்குடி மாவட்டங்களில் ஏற்பட்ட கனமழை காரணமாக தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு கோவில்பட்டி நகருக்கு விநியோகிக்கக்கூடிய குடிநீர் பம்பிங் தொட்டி முழுவதும் சேதமடைந்திருப்பதால் கோவில்பட்டி நகரத்தில் வரக்கூடிய குடிநீர் முற்றிலும் தடைபட்டுள்ளது அதனால் 14.12 .24 முதல் 16.12. 24

வரை 3 நாட்கள் கோவில்பட்டி நகர பகுதியில் குடிநீர் முழுமையாக தடைபடும் சூழ்நிலை உள்ளது. ஆகவே பொதுமக்கள் குடிநீரை மிக சிக்கனமாக பயன்படுத்த அறிவுறுத்தப்படுகிறது. இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தின பூமி
நாளிதழ்
படியுங்கள்



நீலகிரி மாவட்டம் இத்தலார் ஊராட்சி அப்புக்கோடு பகுதியில் சிறப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ.22 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய நூலக கட்டிட கட்டுமான பணியினை மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஈரோடு மாவட்டத்தில்

# 152 மி.மீ. மழை பதிவு: தாழ்வான பகுதியில் மழை நீர் தேங்கியது

**ஈரோடு, டிச. 14-**

வங்கக்கடலில், இலங்கையின் தெற்கு கடல் பகுதியில் ஏற்பட்ட ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக சென்னை, விழுப்புரம், திருவாரூர், புதுக்கோட்டை, கடலூர், ராணிப்பேட்டை, செங்கல்பட்டு, கரூர், ஈரோடு மற்றும் மதுரை உள்ளிட்ட 27 மாவட்டங்களில் நேற்று முன்தினம் பரவலாக லேசானது முதல் பலத்த மழை பெய்து வருகிறது.

இந்த மழைக் காரணமாக நேற்று முன்தினம் தமிழ்நாட்டில் உள்ள 19 மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது.தொடர்ந்து, வரும் 17-ந் தேதி வரை மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தொடர் மழை காரணமாக மக்கள் வீடுகளில் முடங்கி இருந்தனர். நேற்று அதிகாலை முதல் சாரல் மழை பெய்தது. வானம் இருண்டு, மேகமூட்டத்துடனேயே காணப்பட்டது.

பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கும் செல்வோர் சாரல் மழையில் நனைந்தபடியே சென்றனர். தாழ்வானப் பகுதியில் மழைநீர் தேங்கின்றது. ஈரோடு வ.உ.சி மார்க்கெட்டில் வழக்கம் போல் மழைநீர் தேங்கி சேரும் சகதியுமாக காட்சியளித்தது. ஈரோட்டில் நேற்று முன்தினம் இரவு பெய்த மழை அளவு மி.மீட்டரில் வருமாறு:-ஈரோடு - 6.40, மொடக்குறிச்சி - 10, கொடுமுடி - 24, பெருந்துறை - 10, சென்னிமலை - 13, பவானி - 8.80, கவுந்தப்பாடி - 5.60, அம்மாபேட்டை - 9.20, வறட்டுப்பள்ளம் அணை - 10.40, கோபி - 7.20, எலந்தக்குட்டை மேடு - 6.40, நம்பியூர் - 1, சத்தியமங்கலம் - 10, பவானிசாகர் - 10, தாளவாடி - 0.50 என மாவட்டம் முழுவதும் 152 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers 11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

